# தரம் 11



# தமிழ் மொழியும் இலக்கியமும்

## முதனிலை எழுத்துக்கள்
## இறுதிநிலை எழுத்துக்கள்

அலகு 04
எழுத்துக்கள்

Miss.T.Ravaneyaa
NP/Mn/Mavilankerny RCTMS, Murunkan

# எழுத்துக்கள்

- ✓ எழுத்து என்பது ஒலியின் வரி வடிவம் ஆகும்.
- ✓ நாம் காதில் கேட்கும் ஒலிக்கு ஓர் அடையாளம் இட்டால் அதுவே ஓர் எழுத்தாகும்.
- ✓ சொற்கள் எழுத்துக்களால் ஆனவை
- ✓ தமிழில் எழுத்துக்கள் பலவாறாகப் பகுக்கப்பட்டுள்ளன.
- ✓ இங்கு முதனிலை எழுத்துக்கள், இறுதிநிலை எழுத்துக்கள் பற்றி நோக்குவோம்.

# முதனிலை எழுத்துக்கள்

- உயிர் எழுத்துக்கள் - 12
- மெய்யெழுத்துக்கள் - 18

மொத்தம் - 30

✓ இந்த 30 எழுத்துக்களில் எல்லாம் முதனிலை எழுத்துக்களாக வராது.

✓ முதனிலை எழுத்துக்கள் - 22 (உயிர் 12 + மெய் 10)

(அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ + க்,ச்,த்,ப்,ங்,ஞ்,ந்,ம்,ய்,வ்)

உ + ம் :- அன்னை,கண்,சங்கு,தாளம்,பாடம்,ஞானம்,நன்றி,மாண்பு, யாக்கை,வாள்,இங்கனம்(அ,இ,உ ஆகிய சுட்டெழுத்துக்களுடன் மட்டும் வரும்)

✓ ஆய்த எழுத்து (ஃ) மொழிக்கு முதலில் வராது (எ.ஃ.கு – மொழியிடை)

# இறுதிநிலை எழுத்துக்கள்

- ✓ மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் இறுதிநிலை எழுத்துக்கள்.

  உ + ம் :- பூ, நிலா, பூங்கா

- ✓ இறுதிநிலை எழுத்துக்கள் - 24 (உயிர் 12 + மெய் 11 + குற்றியலுகரம் 01)

  (அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ + ஞ்,ண்,ந்,ம்,ன்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள் + கு,சு,டு,து,பு,று)

- ✓ ஞ்,ந்,வ் இவை பழைய இலக்கண வழக்கில் இருந்தாலும் தற்கால வழக்கில் பெரிதும் பயன்படுத்தப்படுவதில்லை.

## பின்வரும் வினாக்களில் மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1) சொல்லாக்கத்தின் போது முதனிலை எழுத்துக்களாகக் கொள்ளப்படும் உயிரெழுத்துக்கள்

1. 7
2. 9
3. 12
4. 4

2) உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டுடனும் மொழிக்கு முதலில் வரும் உயிரேறிய மெய்யெழுத்துக்களின் தொகை

1. 5
2. 9
3. 3
4. 6

3) வகரமெய் எத்தனை உயிரெழுத்துக்களுடன் மொழிக்கு முதலில் அமைந்து வரும்

1. 8
2. 5
3. 3
4. 6

4) மொழிக்கு இறுதியில் சொல்லாக்கத்தின் போது அமைந்து வரும் மெய்யெழுத்துக்கள்

1. 9
2. 11
3. 18
4. 15

5) பின்வருவனவற்றுள் மொழிக்கு இறுதியில் நிற்பவை எவ்வாறு அழைக்கப்படும்

1. சந்தி
2. இடைநிலை
3. விகாரம்
4. சாரியை

6) முதனிலை எழுத்துக்களாக உயிரெழுத்துக்கள் மாத்திரம் அமைந்த தொகுதி

1. ஆடு,இலை,துயில் மரம்
2. உரல்,எருது,ஒன்று,ஔவை
3. சைவம்,ஈசல்,ஓடு,கேண்மை
4. வையகம்,ஒற்றுமை,காடு,பசு

7) சொல்லாக்கத்தின் போது மெய்யெழுத்துக்கள் மட்டும் இறுதிநிலை எழுத்துக்களாக வரும் தொகுதி

1. க்,ச்,ட்,த்,ப்,ற்,ங்

2. இ,ஈ,உ,ந்,ர்,ழ்

3. அ,இ,ஐ,ண்,ம்,ஞ்

4. ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ண்

8) இறுதிநிலை எழுத்துக்களாக அமையாத தொகுதி

1. க்,ச்,ட்,த்,ப்,ற்,ங்
2. இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ
3. ஒ,ஔ,அ,ஞ்,ண்,ம்
4. ஔ,இ,உ,ர்,வ்,ள்

9) இடையின எழுத்துக்கள் மட்டும் இறுதிநிலை எழுத்துக்களாக அமைந்த தொகுதி

1. மண்,மான்,காய்,பால்
2. மணம்,மெய்,வால்,கண்
3. தமிழ்,பார்,தாய்,வாள்
4. மரம்,தாழ்,கணம்,படம்

10) இறுதிநிலை எழுத்துக்களாகத் தற்காலத்தமிழில் பிறமொழிச் சொற்களுடன் இணைந்து வரும் மெய்யெழுத்துக்கள்

1. வல்லின மெய்யெழுத்துக்கள்
2. இடையின மெய்யெழுத்துக்கள்
3. மெல்லின மெய்யெழுத்துக்கள்
4. மெய்க்குற்றெழுத்துக்கள்

**சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்கள் முதனிலை எழுத்துக்கள் ( சரி )
2. சொல்லாக்கத்தில் மொழிக்கு முதலில் உயிரெழுத்துக்கள் மட்டுமே வரும் (பிழை)
3. மொழிக்கு இறுதியில் நிற்பவை இடைநிலை எனப்படும் (பிழை)
4. வல்லினமெய்கள் இறுதிநிலை எழுத்துக்களாகத் தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்றன ( சரி )
5. உயிரேறி வரும் முதனிலை எழுத்துக்கள் ஒன்பதாகும் ( சரி )

6. க்,ப்,ச்,த் எனும் நான்கு வல்லின மெய்களும் பன்னிரெண்டு உயிர் எழுத்துக்களுடன் மொழிக்கு முதலில் வரும் ( சரி )

7. தமிழுக்கு வந்து சேர்ந்த ஆங்கிலம்,ஹிந்தி முதலான பிறமொழிச் சொற்கள் மொழிக்கு முதலில் அமைந்து வரும் (பிழை)

8. எ,ஒ,ஔ என்பன சொல்லாக்கத்தில் இறுதிநிலை எழுத்துக்களாக வரும் (பிழை)

9. ண்,ம்,ன் எனும் மெல்லின எழுத்துக்கள் சொல்லாக்கத்தில் இறுதிநிலை எழுத்துக்களாக அமைந்து வரும் ( சரி )

10. எல்லா எழுத்துக்களும் முதல்நிலை எழுத்துக்களாகவும் இறுதிநிலை எழுத்துக்களாகவும் வரும் (பிழை)

**“அ” பகுதியில் தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான சொற்களை “ஆ” பகுதியுடன் இணைக்குக**

| | |
|---|---|
| 1. ஞகரமெய் முதனிலைச் சொல் | யன்னல் |
| 2. இறுதிநிலை எழுத்துச் சொல் | ஷ் |
| 3. முதனிலை எழுத்துச்சொல் | ஞானம் |
| 4. யகரமெய் முதனிலைச் சொல் | நிலா |
| 5. கிரந்த எழுத்து | அன்னை |

## பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக

| | | | |
|---|---|---|---|
| யகரமெய்களுடன் | ஜ்,ஸ்,ஷ்,ஹ் | இடப்பெயர்கள், ஆட்பெயர்கள் | 22 |
| கடவுள்,கீரை | ண்,ம்,ன் | க்,ச்,த்,ப்,ந்,ம்,வ்,ய்,ஞ் | வாய்,மெய் |
| 24 | ஆய்த எழுத்து | | |

1. மொழிக்கு முதலில் உயிரேறி வரும் மெய்யெழுத்துக்கள் எவை?

**க்,ச்,த்,ப்,ந்,ம்,வ்,ய்,ஞ்**

2. **"க"** வரிசையில் மொழிக்கு முதலில் வரும் சொற்களாக அமைவன?

**கடவுள்,கீரை**

3. **"அ,ஆ,உ,ஊ,ஓ,ஔ"** ஆகிய உயிர் எழுத்துக்கள் எவ்மெய்களுடன் மொழிக்கு முதலில் வரும்?

**யகரமெய்களுடன்**

4. தற்காலத் தமிழில் சொல்லாக்கத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற கிரந்த எழுத்துக்கள் எவை?

**ஜ்,ஸ்,ஷ்,ஹ்**

5. சொல்லாக்கத்தின் போது மொழிக்கு இறுதியில் வரும் மெல்லினமெய்கள் எவை?

**ண்,ம்,ன்**

6. “ய்” வரிசையில் மொழிக்கு இறுதியில் வரும் சொற்களாக அமைவன?

**வாய்,மெய்**

7. தற்காலத் தமிழில் வல்லினமெய்கள் மொழிக்கு இறுதியில் எவற்றைச் சுட்டி நிற்கின்றன?

**இடப்பெயர்கள், ஆட்பெயர்கள்**

8. முதனிலை எழுத்துக்கள் எத்தனை?

**22**

9. இறுதிநிலை எழுத்துக்கள் எத்தனை?

**24**

10. மொழிக்கு இறுதியில் வராத எழுத்து எது?

**ஆய்த எழுத்து**


நன்றி
வணக்கம்